Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** } **Case No. 59 of 2022**

Deposition of ....... witness for ................. { Prosecution........**P.W.3**
Defence
Court

| | |
|---|---|
| Name | உத்திரவேல் |
| Father's name | ராமலிங்கம் |
| Village | திருவதிகை |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 4th day of November 2024.**

(G.VIJAYAKUMAR) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 4th day of November 2024.**

எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

நான் பண்ருட்டி தாலுக்கா, திருவதிகை கிராமத்தில் கடலூர் - பாலூர் சாலையில், மண்டபத்தெருவில் சாய் ஹரி என்ற பெயரில் ஓட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அசா 1 கார்த்திக், அசா 2 வள்ளி ஆகியோரை தெரியாது. இந்த

வழக்கில் இறந்துபோன சாந்தகுமாரை தெரியாது. நான் சம்பவத்தன்று கடையை திறக்கவில்லை. சம்பவம் என்னவென்று எனக்கு தெரியாது. சாந்தகுமார் இறந்துவிட்டதாக மறுநாள் கேள்விப்பட்டேன். எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில், சாட்சியை கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். குறுக்குவிசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு, அரசு தரப்பில் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் நான், எங்கள் ஊரை சேர்ந்த பரமசிவம் மகன் சாந்தகுமாரின் உறவினரான சக்திவேலுவுக்கும் எங்கள் ஊரை சேர்ந்த 1வது எதிரி ஞானவேலுவின் அக்காவிற்கும் தொடர்பு ஏற்பட்டு அதனால் அவர் கர்ப்பமாகிவிட்டதால் இது சம்மந்தமாக பண்ருட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து ஞானவேல் தரப்பினர் சக்திவேலை ஜெயிலில் போட்டுவிட்டதாகவும், சக்திவேல் ஞானவேலின் அக்காவை திருமணம் செய்ய மறுத்ததற்கு, இறந்துபோன சாந்தகுமார் தான் காரணம் என்று அவர்களுக்குள் முன்விரோதம் இருப்பதாக கேள்விப்பட்டோம் என்றும், கடந்த 05.09.2020 ஆம் தேதி மாலை சுமார் -6.45 மணி நானும் எனது மனைவி பவாணியும் எங்கள் கடையில் இருந்தபோது அலறல் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தோம் என்றும், அப்போது திருவதிகை மண்டபம் பஸ் ஸ்டாப் அருகே நின்றிருந்த எங்கள் ஊரை சேர்ந்த சாந்தகுமார், கார்த்திக் ஆகியோரை ஆஜர் எதிரிகள் கையில் ஆயுதங்களுடன் சுற்றி வளைத்து, இரும்பு பைப்பாலும், தடியாலும் அடித்ததாகவும், தடுத்த கார்த்திக்கை கையால் அடித்து கீழே தள்ளினார்கள் என்றும், மீறி வந்தால் ஒழித்துவிடுவோம் என்று கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்றும், அதை பார்த்த நானும் எனது மனைவி மற்றும் சாந்தகுமாரின் அம்மா வள்ளி ஆகியோர் எதிரிகளை தடுக்க

சென்றபோது, மேற்படி எதிரிகள் எங்களை கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்றும், எதிரி குமரன் சாந்தகுமாரை கத்தியால் மார்பில் குத்தினார் என்றும், கோபி கத்தியால் சாந்தகுமாரின் அடிவயிற்றில் குத்தினார் என்றும், விஜயகுமார் கத்தியால் சாந்தகுமாரின் இடது பக்கம் குத்தியபோது, அதனை அவர் தடுத்ததால் இடது பக்க முழங்கையில் காயம்பட்டதாகவும், விஜயகுமார் சாந்தகுமாரின் இடது பக்க மார்பில் குத்தியதாகவும், அதனால் அவர் கீழே விழுந்ததாகவும், உடனே எதிரிகள் சாந்தகுமாரை பார்த்து இதோடு இவன் ஒழிந்தான், இனி நான் தான் இந்த ஊரில் என்று சொல்லிக்கொண்டு கையில் வைத்திருந்த கத்தியால் தரையில் கோடு போட்டு, யாரேனும் பக்கத்தில் வந்தால் உங்களுக்கும் இதே நிலைமைதான் என்று மிரட்டி விட்டு போனார்கள் என்றும், அடிப்பட்ட சாந்தகுமாரையும் கார்த்திக்கையும், வள்ளி ஒரு போக்கு வண்டியில் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்னர் சாந்தகுமார் மேல்சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டோம் என்றும், பின்னர் 06.09.2020 அன்று கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்துபோன சாந்தகுமாரின் பிரேதத்தை பார்க்கசென்றபோது, அங்கு இருந்த பண்ருட்டி உட்கோட்ட பயிற்சி துணை கண்காணிப்பாளர் 06.09.2020 அன்று காலை 08.00 மணி அளவில் பிரேத விசாரணை மேற்கொண்டபோது என்னை விசாரித்ததாகவும், சொல்லிவிட்டு, தற்சமயம் ஆஜர் எதிரிகள் உள்ளூர்க்காரர்கள் என்பதாலும், அவர்கள் மீது உள்ள பயத்தாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-G.Vijayakumar*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 59 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.4**
Defence
Court

| | |
|---|---|
| Name | பவாணி |
| Husband's name | உத்திரவேல் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 4th day of November 2024.**

(G.VIJAYAKUMAR) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 4th day of November 2024.**

**எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை</u>**

நான் பண்ருட்டி தாலுக்கா, திருவதிகை கிராமத்தில் கடலூர் - பாலூர் சாலையில், மண்டபத்தெருவில் சாய் ஹரி என்ற பெயரில் ஓட்டல் வைத்து தொழில் செய்து வருகிறோம். ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் எங்கள் பகுதியை சேர்ந்தவர்கள். இந்த வழக்கில்

இறந்துபோன சாந்தகுமாரை தெரியும். அசா 1 கார்த்திக், அசா 2 வள்ளி ஆகியோரை தெரியாது. சாந்தகுமார் இறந்த அன்று நான் கடை வைக்கவில்லை. அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. சாந்தகுமார் எங்கு இறந்தார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில், சாட்சியை கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். குறுக்குவிசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு, அரசு தரப்பில் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் நான், எங்கள் ஊரை சேர்ந்த பரமசிவம் மகன் சாந்தகுமாரின் உறவினரான சக்திவேலுவுக்கும் எங்கள் ஊரை சேர்ந்த 1வது எதிரி ஞானவேலுவின் அக்காவிற்கும் தொடர்பு ஏற்பட்டு அதனால் அவர் கர்ப்பமாகிவிட்டதால் இது சம்மந்தமாக பண்ருட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து ஞானவேல் தரப்பினர் சக்திவேலை ஜெயிலில் போட்டுவிட்டதாகவும், சக்திவேல் ஞானவேலின் அக்காவை திருமணம் செய்ய மறுத்ததற்கு, இறந்துபோன சாந்தகுமார் தான் காரணம் என்று அவர்களுக்குள் முன்விரோதம் இருப்பதாக கேள்விப்பட்டோம் என்றும், கடந்த 05.09.2020 ஆம் தேதி மாலை சுமார் -6.45 மணி நானும் எனது கணவர் உத்திரவேலும், எங்கள் கடையில் இருந்தபோது அலறல் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தோம் என்றும், அப்போது திருவதிகை மண்டபம் பஸ் ஸ்டாப் அருகே நின்றிருந்த எங்கள் ஊரை சேர்ந்த சாந்தகுமார், கார்த்திக் ஆகியோரை ஆஜர் எதிரிகள் கையில் ஆயுதங்களுடன் சுற்றி வளைத்து, இரும்பு பைப்பாலும், தடியாலும் அடித்ததாகவும், தடுத்த கார்த்திக்கை கையால் அடித்து கீழே தள்ளினார்கள் என்றும், மீறி வந்தால் ஒழித்துவிடுவோம் என்று கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்றும், அதை பார்த்த நானும்

எனது கணவர் மற்றும் சாந்தகுமாரின் அம்மா வள்ளி ஆகியோர் எதிரிகளை தடுக்க சென்றபோது, மேற்படி எதிரிகள் எங்களை கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்றும், எதிரி குமரன் சாந்தகுமாரை கத்தியால் மார்பில் குத்தினார் என்றும், கோபி கத்தியால் சாந்தகுமாரின் அடிவயிற்றில் குத்தினார் என்றும், விஜயகுமார் கத்தியால் சாந்தகுமாரின் இடது பக்கம் குத்தியபோது, அதனை அவர் தடுத்ததால் இடது பக்க முழங்கையில் காயம்பட்டதாகவும், விஜயகுமார் சாந்தகுமாரின் இடது பக்க மார்பில் குத்தியதாகவும், அதனால் அவர் கீழே விழுந்ததாகவும், உடனே எதிரிகள் சாந்தகுமாரை பார்த்து இதோடு இவன் ஒழிந்தான், இனி நான் தான் இந்த ஊரில் என்று சொல்லிக்கொண்டு கையில் வைத்திருந்த கத்தியால் தரையில் கோடு போட்டு, யாரேனும் பக்கத்தில் வந்தால் உங்களுக்கும் இதே நிலைமைதான் என்று மிரட்டி விட்டு போனார்கள் என்றும், அடிப்பட்ட சாந்தகுமாரையும் கார்த்திக்கையும், வள்ளி ஒரு போக்கு வண்டியில் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்னர் சாந்தகுமார் மேல்சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டோம் என்றும், பின்னர் 06.09.2020 அன்று கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்துபோன சாந்தகுமாரின் பிரேதத்தை பார்க்கசென்றபோது, அங்கு இருந்த பண்ருட்டி உட்கோட்ட பயிற்சி துணை கண்காணிப்பாளர் 06.09.2020 அன்று காலை 08.00 மணி அளவில் பிரேத விசாரணை மேற்கொண்டபோது என்னை விசாரித்ததாகவும், சொல்லிவிட்டு, தற்சமயம் ஆஜர் எதிரிகள் உள்ளூர்க்காரர்கள் என்பதாலும், அவர்கள் மீது உள்ள பயத்தாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-G.Vijayakumar*
*I Additional District Judge*
*Cuddalore.*